بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 07-03-2014

# ISLAM IS A WAY OF EQUALITY

# இஸ்லாம் சமத்துவத்தின் வழி

*Hazrat Halifathullah Munir Ahmad Azim (A)*

பூவுலகிலுள்ள தனது தோழர்களுக்கு சமாதான வாழ்த்துக்களை தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது ஆஸீம் (அ) இவ்வாறு கூறினார்.

ஆரம்பகாலகட்டம் முதல் இஸ்லாம் வர்க்க வேற்றுமையை மிக கடினமாக தடைசெய்யப்பட்டிருந்தது. இராஜியங்கள் ஒன்றுக்கொன்றிலும், கோத்திரங்கள் ஒன்றுக்கொன்றிலும் தொடர்ந்து வந்த இந்த கீழ்வர்க்க மேல்வர்க்க வேற்றுமையை முற்றிலும் அழித்துக்கொள்ள இஸ்லாம் முழுமையாக முயற்சித்தது. மனித வரலாற்றில் முதல் முதலாக மனிதனுக்கு அவனது தனிதன்மையின் அடிப்படையில் மகத்துவம் வழங்கின்ற ஒரு நவீன அளவுகோல் திருகுர்ஆனின் இத்திருமொழி மூலமாக உலகம் செவிகொண்டது.

**“மக்களே நாம் உங்களை ஆண் பெண்ணில் இருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துக்கொள்வதற்காக உங்களை கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியமிக்கவர் உங்களில் இறையச்சமிக்கவரே. நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனும் ஆவான்”** (49-14).

இந்த இறைவசனம் மூலமாக உலகில், நிலைக் கொண்டிருந்த எல்லா குல கோத்திர மேன்மைகளுடையவும் மரணமணி முழக்கப்பட்டது. அது பிறப்பாலாகயிருந்தாலும் சரி குலத்தலாகயிருந்தாலும் சரி, செல்வத்தாலாகயிருந்தாலும் சரி, வெள்ளையர்களுக்கு கிடைக்கும் அதே பதவி கறுத்தவர்க்ககாரனுக்கும் கிடைத்தது. திடீரென, என்றென்றுமாக வர்ணத்தின் பெயரில் வெறுப்பு விளைவிக்கின்ற வர்க்க வேற்றுமை உலகில் இருந்து வெளியேற்றப்பட்டது. காலம் ஏராளம் கடந்து சென்றிருந்தும் இன்றும் இஸ்லாமிக நாடுகளில் ட்டில் ரோக் போன்ற சம்பவங்கள் நிகழுவதில்லை. சவுத் ஆப்பிரிக்காவிலும் மற்றும் நிகழ்ந்து வந்ததைப் போன்று வர்க்க வர்ணவேற்றுமை சட்டம் மேற்கு ஆசியாவிலும், கிழக்கு தேசங்களில் நிகழ்ந்ததே இல்லை.

**“அரபிக்கு அநரபியைவிடவோ, அநரபிக்கு அரபியைவிடவோ மேன்மையில்லை. நீங்கள் அனைவரும் ஆதாமின் சந்ததிகளே ஆவீர்கள். ஆதாம் படைக்கப்பட்டிருப்பதோ மண்ணில் இருந்து.”**

மீனாதாழ்வரையில் வைத்து தூய தூதர் முஹமது முஸ்தபா(ஸல்) செய்த இறுதி பேருரையின் சிறந்த பகுதியேயாகும் மேல் சுட்டிக்காட்டியிருப்பது.

மேல்கூறிய தூய்மையான அறிக்கை வழியாக சமூகமுன் தூக்கத்திற்கும் மேன்மைக்கும் திரயினை வீழ்ந்தது. அரபிகளுக்கும் அநரபிகளுக்கும் ஒன்றுக்கொன்று வேற்றுமையில்லாத நிலை உருவானது. யூதர்களுக்கும் உருவவணக்கம் செய்வோர்களுக்கும் இடையிலான அகலம் முறியடிக்கப்பட்டது. கிரேக்கர்களுக்கும், பார்போரியன்ஸ்களுக்கும் இடையிலான வித்தியாசம் அழிந்து விட்டது. மேல்மட்டகுலத்திற்கும் தாழ்மட்ட குலத்திற்கும் ஒன்றுக்கொன்றான பகைமைக்கு முடிவுகட்டப்பட்டது. முன்காலங்கள் வழியாக நிலை நின்றிருந்த எல்லா வகைப்பட்ட வர்க்க - வர்ண, குல-கோத்திர வேற்றுமையும் முற்றிலும் மாய்த்துக்கொள்ளப்பட்டது. பணமுடையவனுடைய படிவாதில் சென்று பிச்சை எடுக்கும் ஏழையின் நடைசெயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பணக்காரர்களில் இருந்து தேவையான பணம் சமாகரித்துக்கொள்ள மதம் அவர்களுக்கு அனுமதி வழங்கியது. மக்கள் நலனுக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்குமாக அந்த பணத்தை செலவிட வழிவகுக்கப்பட்டது. பெண் ஒரு பாயல் பொருள் என்ற எண்ணத்தை தவிர்த்து அவளுக்கும் ஆண்களை போன்று சுதந்திரவும், உரிமையும் வழங்கப்பட்டது. அடிப்படையற்ற நியாயங்கள் கூறி அடிமைகளை வைத்துக் கொள்வதை அது முற்றிலும் மாய்த்துவிட்டன. அது முழுமையாக அடிமைத்துவத்தை அழித்துவிட உதவியளித்தது. இஸ்லாமில் தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்ற வேற்றுமையில்லை. எல்லா மக்களும் சமமாகும். இது வழி ஒரு புதிய உலகைப்படைக்க மறுபடியும் முயற்சித்திருந்திருப்பின் நிரந்தரமான அமைதியினை பாரினில் அமைத்திருக்க முடிந்திருக்கும். வீணாசைகளுடையவும் வர்ணமேன்மைகளுடையவும் வர்க்க மகத்துவத்தினுடையவும் தூண்கள் நிலம் தழுவியிருந்திருக்கும். இந்த நவீன உலகம் எவ்வளவு எளிதில் அமலுக்கு வருகின்றதோ அப்போது இஸ்லாமின் நல்லொழுக்க அமைப்பை உலகம் ஒத்துக்கொள்ளவும் அது தேசிய அளவிலும் உலக அளவிலும் அமலுக்கு வந்துவிடவும் செய்யும்.

மக்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்திக்கொள்வதற்கும் அவர்களின் சுக சௌக்கியங்களை பாதுகாப்பதற்கும் இன்று பலதரமான முயற்சிகள் பலநாடுகளிலும் நடந்து வருகின்றது. ஆனால் இஸ்லாம் தோன்றிய காலம் முதல் சமூக சமத்துவத்திற்கும் சம உரிமைக்கும் சமூக நலனுக்கும் அதன் சட்டம் வழியாக முயற்சிகள் மேற்கொண்டு வந்திருந்தது.

**1. சக்காத் 2. சதக்க 3. தொடர் உரிமை சட்டங்கள் 4. வட்டி தடைசெய்தல் 5. வியாபார-விவசாய நிறுவனங்களை அமைத்தலும் அதை நிலைநிறுத்திக்கொள்ள ஊக்குவிப்பதும்.**

ஒரு நாட்டின் பொருளாதார கட்டுப்பாடை மேற்கொள்ள வேண்டுமென்றால் சில இஸ்லாமிக போதனைகளை நடைமுறைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நமக்கு உணர முடியும். நிச்சயமாக நமது நிகழ்காலம் மிக சிக்கலான நிலையை எட்டியிருக்கின்றது. மிக கடினமான சூழ்நிலைகளையாகும் நமக்கு எதிர்கொள்ள வேண்டியது. தேசிய அளவில் பொருளாதார கட்டுபடுதலுக்கு அடிப்படையான தத்துவங்களை நாம் தேடிக்கொள்ள வேண்டும். அது எல்லா தேவைகளையும் நிறைவேற்ற தகுந்த மிக தெளிவான தத்துவங்களே ஆகவேண்டும்.

இஸ்லாமில் மத துன்புறுத்தல்களுக்கு இடமில்லை. மதபோர்களும், வம்ச போராட்டங்களும் மோசமான ஏராளம் தவறுகள் செய்திட காரணமாகின்றது. கொள்ளை, விபச்சாரம், திருட்டு, நெருப்புக்கு இரையாக்குதல், இரத்த சிந்தல் போன்ற தீய செயல்களுக்கு ஊக்குவிப்பது இத்தகையான போராட்டங்களே ஆகும். நாம் உட்படுகின்ற உலக வரலாற்றில், கறுத்த அதிகாரங்கள் தோன்ற காரணம் மனிதனின் இவ்வகை தீய செயல்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. தற்பெருமை, நானும் எனது வார்த்தைகளும் மட்டும் என்ற எண்ணம், மததீவிரவாதம், சகிப்புத்தன்மையில்லாய்மை, அத்துமீறுதல் போன்ற தின்மைகளை மனிதர்களில் இருந்து அழித்துக்கொள்ளல் என்பது மிக கடினமான வேலையாகும். இத்தகை தீய செயல்களே எல்லா தர போராட்டங்களுக்கும் வழிவகுப்பது.

பகைவர்கள் கூறுவது போன்று இஸ்லாம் படையாளிகளின் மதமல்ல. இஸ்லாமின் மேல் சுமத்தப்பட்ட இத்தகை ஆட்சேபங்கள் தவறானதும் அடிப்படையற்றதும் என்றும் தெளிவிக்கப்பட்டுவிட்ட விஷயமேயாகும். இஸ்லாம் ஒருபொழுதும் மத துன்புறுத்தல்கள் நடத்தியது இல்லை. மட்டுமின்றி கட்டாயப்படுத்தி மதமாற்றங்கள் நடத்தியதுமில்லை. இதை குறித்து அதிகம் அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றோர்கள் திருகுர்ஆனின் இந்த இரண்டு வசனங்களை கவனியுங்கள். மற்று மதங்களோடு இஸ்லாமிற்கு சிறந்த மனப்பான்மையே என்பது இந்த வசனங்கள் உறுதிப்படுத்துகின்றது.

**முதல் வசனம்**

**“அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவர்களை நீங்கள் திட்டாதீர்கள். அப்படி திட்டினால் அவர்கள் அறிவில்லாமல் வரம்பை மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள்”.** (6-109)

உருவ வழிப்பாடு செய்கின்றவர்களோடு கூட ஒரு முஸ்லீம் சகிப்புத்தன்மையோடு பருமாறிக்கொள்ள வேண்டும் என்று திருகுர்ஆன் உறுதியாக கூறுகின்றது. இஸ்லாமின் நம்பிக்கைக்கு முற்றிலும் எதிரேயாகும் உருவ வணக்கம். அவ்வாறானாலும் இந்த கட்டளையின் சிறப்பு ஒன்றுக்கொன்று குற்றம் கூறுதல் இறுதியில் போராட்டங்களிலும் கொலைகளிலும் மனிதனை அழைத்துச்செல்லும் என்பதாகும்.

இரண்டாவது வசனம் கோவில்களையும் மற்று ஆராதனை நடத்தும் நிலையங்களையும் அழித்துக் கொள்ளவோ கேடுபாடுகள் விளைவிக்கவோ செய்ய கூடாது என்ற கட்டளையாகும் அல்லாஹ் கூறுகின்றான்.

**''மனிதர்களில் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் கிறிஸ்தவ கோயில்களும் யூதர்களின் ஆலயங்களும் அல்லாஹ்வின் திருநாமம் தியானிக்கப்படும். மஸ்ஜீதுகளும் அழிக்கப்பட்டு போயிருக்கும்''.** (22-41)

இங்கு கவனித்துக்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் தங்களுக்கு நேர்ந்த துன்புறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் முஸ்லீம் பள்ளிகளை பாதுகாத்துக்கொள்வதற்குமாக மட்டும் முஸ்லீம்கள் தங்களது வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும் என்றல்ல, மாறாக கிறிஸ்தவ தேவாலயங்களும், யூதப்பள்ளிகளும், முனிவர் மடங்களும் பாதுகாப்பதற்கு கூட தங்களின் வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும் என்றாகும். அவ்வாறு பரிபூரணமான மத சுதந்திரத்தை கட்டிக்காத்திட ஒவ்வொரு முஸ்லீம்களும் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். முஸ்லீம் பள்ளிகளில் அல்லாஹ்வின் நாமத்தை மிக அதிகமாக புகழப்படுகின்றது என்றாலும் அதன் பாதுகாப்பு முனிவர் மடங்களுக்கும் கிறிஸ்தவ தேவாலங்களுக்கு பிறகு என்று கட்டளை விடுத்திருக்கின்றது. மற்று மதங்களோடு இஸ்லாம் வைத்துள்ள மதசகிப்புத்தன்மையும் நேசவும் எவ்வளவு மகத்தானது என்றும் பாருங்கள். திருகுர்ஆனை தவிர்த்து வேறொரு மத நூலும் இவ்வாறு கூறியிருப்பதாக காணயியலாது.

இந்த உரையை தற்பொழுது நிறைவுப்படுத்துகின்றேன். வருகின்ற வெள்ளிக்கிழமையும் இந்த உரையினை தொடர்ந்து ஆற்றிட அல்லாஹ் தௌபீக் வழங்குவானாக. காரணம் ஆப்பிரிக்காவிலும் மற்று நாடுகளிலும் முஸ்லீம்களை துன்புறுத்தி கொண்டிருப்பது மிக வருத்தம் நிறைந்த விஷயமாகும். அவர்களின் இஸ்லாமை பாதுகாப்பதற்கு அவர்களுக்கு ஒன்று செய்துக்கொள்ள முடியாத சூழ்நிலை. அவர்களின் உயிரும் சொத்தும் அந்தஸ்தும் அபாயத்திலாகும். நிரபராதிகளாகிய ஏராளம் மக்கள் கொலை செய்யப்படுகின்றன. இந்த மகத்தான மதத்தின் பேரும் பெருமையும் உணர்ந்து கொள்வதற்கும் ஒத்துக்கொள்வதற்கும் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ் வாய்ப்பு வழங்குவானாக!. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Issued by R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817